Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# பல்லவர் கால கவின்கலைகள் – கல்வெட்டுகள் ஒரு சிறப்புப் பார்வை (கி.பி.600 - 900)

58

**முனைவர் மா. பவானி**
**இணைப்பேராசிரியர், கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை**
**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.**

கவின் கலைகள் என்பவை இசைக்கலையோடு தொடர்புடைய இசைக்கருவிகள், ஆடற்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, நாடகக்கலை, நுண்கலைகள் என்பன. இக்கலைகளின் வளர்ச்சிக்குக் கோயில்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. இக்கலைகள் பழங்காலம் முதலே தமிழர் பண்பாட்டோடு பின்னிப் பிணைந்து வந்துள்ளன. இக்கலைகலைப் போற்றிக்காப்பதற்கும், அவற்றின் வளர்ச்சிக்கும் தமிழகத்தை ஆண்ட மன்னர்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். அந்த வகையில் கோயில் கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை போன்றக் கலைகளை வெளியுலகுக்கு அறிமுகப்படுத்திய பல்லவ மன்னர்கள் காலத்துக் கவின் கலைகளை இக்கட்டுரை ஆராய்கின்றது.

**திறவுச்சொற்கள் :கவின்கலைகள், இசை, ஓவியங்கள், கற்றளி, சிற்பங்கள், நடனம்**

Abstract

This article discussed about the fine arts like music, dance, drama, paintings sculptures and architecture. Even though it was prevailed since the sangam age it reached its hight during the pallva period. The structural temple with un perishable materials started to built in the period of the Mahendra varma I. The important contributions of the pallavas to the world of Arts given importance with the epigraphs.

**Key words: fine arts, music, paintings, Structural temple , iconography, dance , Sculptures**

**முன்னுரை**

சங்கம் மருவிய காப்பியக் காலத்திற்குப் பிறகு தமிழகத்தை ஆட்சி செய்தவர் பல்லவ வம்சத்தினராவர். சங்கத்தமிழர்கள் வளர்த்த அழகுக் கலைகளைத் தொடர்ச்சியாக காத்து வளர்த்தவர்களும் அவர்களேயாவர். இன்றும் வானுயர்ந்து நிற்கும் வியத்தகுக் கற்றளிகளைக் கட்டியவர்களுள் முன்னோடிகளும் பல்லவர்களே. இவர்கள் காலத்தில் கவின்கலைகளான கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, நடனக்கலைகள் போன்ற கலைகள் சிறந்தோங்கி வளர்ந்தன. பல்லவ மன்னர்கள் கலைகளை ஓம்புவதில் சிறந்துவிளங்கியதுடன் தாமும் சிறந்த கலைஞர்களாகவும் திகழ்ந்துள்ளனர். அவ்வகையில் பல்லவர்கள் கலைக்கு ஆற்றிய அரும்பணிகள் குறித்து இக்கட்டுரை சிறிது ஆராய்கிறது.

**இலக்கியங்கள் கூறும் கலைகள்**

இலக்கியங்கள், ஆயக்கலைகளை 64 என்று பட்டியலிடுகின்றன. அவற்றுள் முக்கியக் கலைகளாகக் குறிப்பிடப்படுவது மேற்சுட்டிய கட்டட, இசை, ஓவியம், சிற்பம், நடனக் கலைகளாகும்.

இக்கலைகள் அழகுக்கலை, இன்கலை, கவின்கலை, நற்கலை என்று பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றன. (மயிலை, சீனி வேங்கடசாமி, 2022,பக். 22)

**கட்டடக்கலைகள்**

பழங்காலத்தில் கட்டடங்கள் எல்லாம் மரத்தாலேயே கட்டப்பட்டுள்ளன. இவற்றை அமைப்பதும் எளிதாகும். இன்றும் ஒரு சில பகுதிகளில் மரக்கட்டடங்கள் உள்ளன. (மயிலை, சீனி வேங்கடசாமி, 2022,பக். 30 .) சங்க காலத்தில் செங்கல் கொண்டு கட்டப்பட்ட கோயில்கள் இருந்துள்ளன. இவற்றில் மரத்தால் விட்டங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. இவை இடிந்து வீழ்ந்துள்ளதை அகநானூறுப் பாடல் குறிப்பிடுகிறது

‘இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென
மணிப்புறாத் துறந்த மரஞ்சோர் மாடத்து
எழுதணி கடவுள் போகலிற் புல்லென்று
ஒழுகுபலி மறந்த மெழுகாப் புன்றிணை’ (*அகநானுறு*:167)

செங்கணான் என்ற கடைச்சங்க கால சோழமன்னன் சிவபெருமானுக்கு 78 கோயில்கள் அமைத்ததை இலக்கியங்கள் சுட்டுகின்றன.

‘இருக்கிலங்கு திருமொழிவாய் எண்டோ ளீசற்கு
எழில் மாடம் எழுபது செய்துலக மாண்ட
திருக்குலத்து வளச்சோழன்’
பெருக்காறு சடைக்கணிந்த பெம்மான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோடெட்டும்’ ( திரு அடைவு திருத்தாண்டகம்:5)

**கற்றளிகள் உருவாகுதல் – முதலாம் மகேந்திரவர்மன்**

பொ.ஆ. 5 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பூலாங்குறிச்சிக் கல்வெட்டில் இரு தேவகுலங்களும் ஒரு கோட்டமும் அமைக்கப்பெற்ற செய்தி குறிப்பிடப்பெற்றுள்ளது. (ஆவணம், இதழ்.1,1991.)

முதலாம் மகேந்திரவர்மனின் மண்டகப்பட்டு கிரந்த கல்வெட்டே கட்டடங்கள் எவையெல்லாம் கொண்டு கட்டப்பெற்றிருந்தன என்பதற்குச் சான்றாகும். செங்கல் (அனிஷ்டகம்), அத்ருமம் (மரம்) உலோகம் (அலோகம்), அஸிதம் (சுதை/ சுண்ணாம்பு?) இப்பொருட்கள் எவையும் இல்லாமல் பிரம்மன், ஈஸ்வரன், விஷ்ணு ஆகிய மூன்று கடவுளர்க்கும் மகேந்திர வர்மன் கோயில் அமைத்ததை இக்கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டில் கோயில் என்பதற்கு ‘*லக்ஷிதாயதனம்*’ என்ற பெயர் குறிப்பிடப்பெறுகிறது. இன்றுள்ளதுபோல் கோயில் என்று குறிப்பிடாமல் அந்தந்த அரசர்களில் பெயருடன் இணைத்தே கோயில் பெயர்கள் பெரும்பாலும் வழங்கப்பெற்றுள்ளது. காட்டாக லக்ஷிதாயதனம் என்பது மகேந்திரவர்மனின் பட்டப்பெயரான லக்ஷித (இலட்சியத்தை உடையவன்) என்றப் பெயருடன் தொடர்புடையது. எனவே மகேந்திரவர்மன் காலந்தொட்டே பாறைகளைக் குடைந்து கட்டடங்கள் அமைக்கும் குடைவரை கலை உருவாகியுள்ளதை அறியலாம்.


*ஏகத் அநிஷ்டகம் – அத்ரும மலோ*

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

*கம் – அசுதம் விசித்ர சித்தேந*
*நிர்மா பித – நிருவேண பிரமே*
*ச்வர – விஷ்ணு – லக்ஷிதாயத நம்* – என்ற கல்வெட்டு குறிப்பிடுகிறது.
(*EI,* XVII,14-17)

குடைவரைக் குகைக்கோயில்களை அமைத்து கட்டடக்கலையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியவன் முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் ஆவார். செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள பல்லாவரம், காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை, மண்டகப்பட்டு, மகேந்திரவாடி, சீயமங்கலம், மேலைச்சேரி, வல்லம், மாமண்டூர், தளவானூர், சித்தன்னவாசல் முதலிய ஊர்களில் முதலாம் மகேந்திரவர்மன் அமைத்த குடைவரைக் கோயில்கள் உள்ளன.

**கற்றளிகள் உருவாகுதல் – இரண்டாம் நரசிம்மன் என்கிற இராஜசிம்மன்**




**முதலாம் நரசிம்மன் மகாபலி புரத்தில் புகழ்மிக்க 14குகைக் கோயில்களையும் 9 ஒற்றைக்கல் இரதங்களையும் தோற்றுவித்தார். பஞ்சபாண்டவர் இரதம், மகிஷாசுரமர்த்தினி குகை, வராகர் குகை, ஆதிவராகர் குகை, இவை குறிப்பிடத்தக்கவை. கடற்கரையில் இரண்டு சிவன்கோயில்களுக்கு நடுவில் அனந்தசாயி கோயிலை அமைத்திருப்பது 'பாகிரதி தவம்' போன்ற சிற்பங்கள் இவரது கலைப்படைப்பின் மைல்கல்லாகும்.** (M.Lockwood, (1974)*Mahabalipuram Studies*, Madras,p.45)

**இரண்டாம் நரசிம்மன் என்கிற இராஜசிம்மன் முதலாம் மகேந்திரவர்மனைப் போலவே சகலகலாவல்லவனாகத் திகழ்ந்துள்ளார். இவர் காலத்தில்தான் முதன்முதல் மாமல்லபுரம் என்னும் நகரம் கலையம்சங்களுடன் உருவாக்கப்பெற்றுள்ளது. செங்கல் , சுண்ணாம்பு எவையுமின்றி பாறைக்கற்களை ஒன்றன்மேல் ஒன்று அடுக்கி கோயில்களை அமைக்கும் முறை கற்றளி எனப்படும். உலகப்புகழ் மிக்க மகாபலிபுரம் கடற்கரைக் கற்றளியை அமைத்தப்பெருமை இவரையேச் சாரும். இது மட்டுமின்றி காஞ்சி கையிலாசநாதர் கோயில் என்று அழைக்கப்படும் இராஜசிம்மேஸ்வரம், பனைமலை கற்றளி போன்றவை இவர் காலத்தில் அமைக்கப்பெற்றவையாகும். கடற்சீற்றத்திலும் காலத்தால் அழியாமல் நிற்கும் இக்கற்றளிகள் இவரது கட்டடக்கலைத் திறனுக்கொரு சிறந்த எடுத்துக்காட்டாகும். (A. Rea, Pallava Architecture, ASI, Imperial series, XXXIV ).**

**இசைக்கலை**

பல்லவர் காலத்தில் இசைக்கலையும் உயர்ந்தோங்கி திகழ்ந்துள்ளது. இசைக்கலைஞர்களை அரசு விருது கொடுத்து கௌரவித்துள்ளது. ஆடல் பாடல் மட்டுமின்றி இசைக்கருவிகளை இசைப்போரும் இருந்துள்ளனர். இவற்றை ஒரு சில கல்வெட்டுகள் வாயிலாக அறியமுடிகிறது.

குடுமியான்மலை கல்வெட்டு இசைப்பற்றி கூறும் மிகச்சிறந்தக் கல்வெட்டாகும். இங்கு இசையின் ஏழு பிரிவுகள் குறிப்பிடப்பெற்றுள்ளன. EI,vol.XII,pp.227-228); *IPS*.nos.1-3). பொ.ஆ. 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த குடுமியான்மலைக் கல்வெட்டு மகேந்திரவர்மன் காலத்தைச் சேர்ந்ததாகக் கருதப்பெறுகிறது. இக்கல்வெட்டில் முழுக்க முழுக்க சமஸ்கிருத ஸ்வரங்கள் அமைக்கப்பெற்ற இசைப்பாடல்களே கல்வெட்டாக அமைந்துள்ளன. ஒவ்வொரு பாடலும் என்ன ராகத்தில் அமையவேண்டும் என்பதும் இதில் குறிப்பிடப்பெற்றுள்ளன. ஏழு பிரிவுகளில் ஒவ்வொன்றும் "நான்கு ஸ்வரங்களின்" கீழ் பதினாறு தொகுப்புகளின் கீழ் அமைக்கப்பட்டுள்ளன. அவையும் தனித்தனியாகக் குறிப்பிடப்பட்ட ஒரு தலைப்பின் கீழ் பல துணைப்பிரிவுகளாகப் பிரிக்கப்பெற்றுள்ளன. இந்த ஏழு பிரிவுகளும் அக்கால ஏழு செவ்வியல் ராகங்களுடன் ஒத்துப் போகிறது என ஒரு சில அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இக்கல்வெட்டில் ராகங்கள் பற்றி ஏதும் பேசவில்லை. ஸ்வரங்கள் பற்றி மட்டுமே பேசுகின்றன. 'சதுர்ப்ரஹார ஸ்வராகமகஹ்' என்றே குறிப்பிடுகிறது. 'சதுர்ப்ரஹார ஸ்வராகமகஹ்' என்ற பிரிவின் கீழ் 1.மத்யமக்ராம 2.ஸத்யக்ராமா 3.ஷடவக்ராமா 4.ஸாதாரித 5.பஞ்சம 6.கைஸிக மத்யமா, 7. கைஸிக . என்ற 7 ஸ்வரங்கள் குறிப்பிடப்படுகின்றனவே ஒழிய ராகங்கள் அல்ல என்று சி.மீனாட்சி மிக ஆழமாக ஆராய்ந்து அவரது கருத்துக்களை 30 பக்கங்களுக்கு மேல் வழங்கியுள்ளார். (C.Meenakshi, 1977:pp.286 -308) இசை ஆராய்ச்சி செய்வோர் இவர் கூறும் கருத்துகளை மேலும் ஆய்வு செய்தல்வேண்டும்.

இதில் சங்கீர்ண ஜதி என்ற ஒரு ஜதியின் பெயர் குறிப்பிடப்பெற்றுள்ளது. முதலாம் மகேந்திரவர்மன் இசைக்கலையில் வல்லவன் என்பதை இது நிரூபிக்கும் வகையில் உள்ளது.

இக்கோயிலின் கருவறையின் வெளிப்புறம் கிரந்த எழுத்தில் 'பரிவாதிநி' என்று பொறிக்கப்பெற்றுள்ளது. இதை வீணையைப்போன்று ஒரு இசைக்கருவியாகும். கல்வெட்டில் 'இது எட்டுக்கும் ஏழுக்கும் உரியது' என்ற தொடர் இடம்பெறுகிறது. இதை அறிஞர்கள் 7 மற்றும் 8 நரம்பிணையுடைய வீணையில் இப்பாடலை வாசிக்க க்கூடும் என்று குறிப்பிடுகின்றனர். (IPS: nos 1-3) பல்லவ அரசர் காலந்தொட்டே தமிழகக் கோயில்களில் தேவாரம் இசைக்கப்பட்டுள்ளது. திருவல்லம் கல்வெட்டு சிவன்கோயில் ஒன்றில் திருப்பதியம் பாடப்பெற்றதைக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டுகளில் மூன்று கல்வெட்டுகள் நந்திவர்மன் காலத்தைச் சேர்ந்தவை. இதுவே கல்வெட்டுகளில் திருப்பதியம் பாடுவது பற்றிக் குறிப்பிடும் முதல் கல்வெட்டாகும். *(SII* ,vol.III, no.43) சோழர் கல்வெட்டுகளில் தேவாரத் திருப்பதிகங்களில் , திருவாய்மொழி ( *ARE,* 1916, no.393), திருவெம்பாவை (*ARE*, 1921,no.343; 1912,no.427) திருத்தாண்டகம் (*ARE*, 1917,no.219) ஆகியன பாடியமைக்கான சான்றுகள் உள்ளன.

**கூத்து / நடனக்கலை**

தமிழ் நிலத்தில் உள்ள பூர்வீக நடனங்கள், இலக்கியங்களில் ***கூத்துகள்*** என்று

குறிப்பிடப்பெற்றுள்ளன. ஆரம்பகால தமிழ் படைப்புகளானக் கூத்துகள், தமிழ்நாட்டின் பூர்வீக நடனங்களின் தனித்துவமான அம்சங்களைக் கொண்டிருந்தன.

ஆடுமாடுகள் மேய்க்கும் மேய்ச்சல் சமூகத்திலேயே கூத்துகள் முதலில் உருவானதாக மீனாட்சி குறிப்பிடுகிறார். (C.Meenakshi, 1977, pp.309-310) சிறப்பு நிகழ்வுகளில் இடையர்கள் தங்கள் மகிழ்ச்சியைக் கூத்தாடி வெளிப்படுத்தியுள்ளனர். இது '*வெறியாட்டு*' அல்லது '*விடடக்கூத்து*' என்று அழைக்கப்பெற்றுள்ளது. இந்த நடனங்கள் குரல் மற்றும் கருவி ஆகிய இரண்டு இசையுடனும் நிகழ்த்தப்பட்டுள்ளன. அவற்றில் யாழ், குழல் மற்றும் பறை ஆகியவை மிகவும் முக்கியமான கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டன.

சிலப்பதிகாரத்தின்படி, நடனம் மற்றும் இசையில் அதிகத் தகுதியும், அழகும் பெற்ற பெண்களே சிறந்த நடனக் கலைஞர்களாகக் கருதப்பட்டனர்." நடன மாணவர்கள் தங்கள் ஏழாவது வயதில் பயிற்சியைத் தொடங்கி 12 வயது வரை தொடர்ந்து பயிற்சி செய்தனர். 5 ஆண்டுகள் முடிந்தவுடன் அரங்கேற்றம் நடத்தப்படும். புகாரைச் சேர்ந்த மாதவிக்கு, சோழ மன்னன் கரிகால் பெருவளத்தானின் அவையில் அரங்கேற்றம் வைத்திருந்ததாகக் கூறப்படுகிறது. இந்த திறமையான நடனக் கலைஞர்கள் பல்வேறு வகையான கூத்துகளை செய்து தமது திறமையை வெளிப்படுத்தியுள்ளனர். இலக்கியங்களில் மாதவி 11 வகையான கூத்துக்கள் ஆடியதாகக் குறிப்புகள் உள்ளன.

அரசர்கள் இவர்களுக்குப் பட்டமும் பாராட்டும் வழங்கியுள்ளனர். *தலைகோலி* என்பது திறமையான நடனக்கலைஞர் அல்லது கூத்திகளுக்கு அரசால் வழங்கப்படும் விருதாகும். (C.Meenakshi, 1977, pp.311).

பரதரின் நாட்டிய சாஸ்திரத்தில் அறிவியல் ரீதியாகக் கையாளப்பட்ட பாரம்பரிய இந்திய நடனத்திலிருந்து அவை முற்றிலும் வேறுபட்டவை.

பல்லவர் காலம் முதற்கொண்டே கல்வெட்டுகளில் கூத்துக்கள் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. பொது ஆண்டு 759ஆம் ஆண்டைச் சேர்ந்த இரண்டாம் நந்திவர்மன் கல்வெட்டே இந்த ஆய்விற்கு' "கூத்து" குறித்து கிடைக்கும் காலத்தால் முற்பட்ட கல்வெட்டுக் குறிப்பாகும். இக்கல்வெட்டில் "கூத்தி" என்ற சொல்லாட்சி இடம்பெறுகிறது. (*SII,*vol.IV, 827) 32 பெண்கள், 12 கூத்திகள் முக்தேஸ்வரர்கோயில் நடனக்குழுவில் இருந்துள்ளனர். இவர்களுக்கு தவசிகள் என்போர் உணவுக்கொடை வழங்கியுள்ளனர். இவர்களுக்குரிய அளவு முறைகள் வழங்கும் பணியினைக் கோயில் நிர்வாகம் மேற்கொண்டுள்ளது. அவர்கள் அடிகமார் என்று அழைக்கப்பெற்றுள்ளனர். (*ARE* 303/1901) இவர்கள் மாணிக்கத்தார், கணிகையார், ருத்ரகணிகையார் என்று பலவாறாக அழைக்கப்பெற்றுள்ளனர். (*ARE* 302/1902) சுந்தரமூர்த்தி நாயனார் திருமணம் செய்யவிருந்த பெண் பரவையார் ஒரு ருத்ரகணியின் மகள் என்பது குறிப்பிடத்தக்கது.

**இசைக்கருவிகள் இசைப்போர்**

அமுதரையன் நாயற்றுக்கணி , மாதவஸர்மன் ஆகிய இருவரும் தட்டொலி கொட்டுவதற்காக நியமிக்கப்பெற்றுள்ளனர். இதற்காக இவர்களுக்கு ஒரு கொற்று நெல்

வழங்கப்பெற்றுள்ளது. தட்டொலி என்பது உலோத்தகடு அல்லது தட்டு இதை தட்டுவதால் ஏற்படும் ஒலியே தட்டொலியாகும் என அறிஞர்கள் கருதுகின்றனர். ஸ்ரீபலிகொட்டுவார், திருப்பலிக்கொட்டுவார் போன்ற சொற்கள் கல்வெட்டுகளில் இடம்பெறுகின்றன. இரண்டு சொற்களும் ஒரே பொருளையேத் தருகின்றன. இறைவனுக்கு உணவு படைக்கும் போதும் பிற கோயில் சேவைகளின் பொழுதும் இது இசைக்கப்பெற்றுள்ளது. சில அறிஞர்கள் கூறுவதைப் போல் இது பறை அல்ல. கம்பவர்மன் ஆட்சியில் மனஸர்ப விஷ்ணு கிரகத்தில் தட்டொலி வாசிப்போர் 16 பேர் இருந்துள்ளனர். (SII,VIII,p.265/ ARE 208/1901) பிந்தைய பல்லவர் காலத்தில் பறை , உவச்சு வாசிப்போரும் தட்டொலி வாசிப்போரில் இடம்பெற்றுள்ளனர். இதை வைரமேகவர்மனின் கல்வெட்டுகளில் காணலாம். (ARE 152/1916).

**இசை பற்றிய நுட்பங்கள்**

பரத நாட்டியத்திற்குப் பல்லவர்கள் முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். அந்த அளவிற்கு உள்நாட்டு நடனங்கள் (கூத்து) பல்லவ ஆட்சியாளர்களால் ஊக்குவிக்கப்படவில்லை. பரதநாட்டியம் மகேந்திரவர்மன் காலத்திலிருந்து தொடங்கியுள்ளது. இந்நடனம் அரச சபையில் பிரபலமாக இருந்தது. ராஜசிம்ம ஆட்சியின் போது அதன் உச்சக்கட்டத்தை எட்டியது. இவரது காலத்தில் நடனக்கலை ஒருசில மாறுதல்களைப் பெற்றது. இராஜசிம்மனின் ராணிகளில் ஒருவரது பெயர் ‘ரங்கபதாகா’ என்பதாகும். இந்த பெயரே இவர் நாட்டியத்தில் பெற்றிருந்தத் தேர்ச்சியைக் காட்டுகிறது. .

தமிழ்ச் சமூகம் அவர்களுக்கு ஒரு மரியாதைக்குரிய இடத்தை வழங்கியது. ஏழாம் நூற்றாண்டிலிருந்தோ அல்லது அதற்கு முந்தைய காலத்திலிருந்தோ நாட்டியக் கலைஞர்கள் கோயில்களில் சேவையில் ஈடுபட்டுள்ளனர் என்பது அப்பர், சம்பந்தர் ஆகியோரின் பாடல்களிலிருந்து தெளிவாகிறது.

**சித்தன்னவாசல் குகையில் நடனக் காட்சி:**




சித்தன்னவாசல் குகையின் ஓவியர்கள் பெண் நடனக் கலைஞர்களின் முழு உருவங்களையும் வரையவில்லை மற்றும் மார்பளவு மட்டுமே காட்டப்பட்டுள்ளது. வலது பக்கத்தில் நடனக் கலைஞர் தனது இடது கையை ***கஜ ஹஸ்த***

***தோரணையில்*** வைத்திருக்கிறார். அவருடைய வலது உள்ளங்கை சதுர தோரணையில் வைக்கப்பட்டுள்ளது. தில்லையின் தங்க மண்டபத்தில் உள்ள சிவனின் சிற்பங்கள் மற்றும் வெண்கலப் படங்களில் இந்த கை தோரணை ஒரு சிறப்பு அம்சமாகும்.

**முடிவுரை**

இவ்விதமாகச் சங்க காலத்தில் நம் இலக்கியங்களில் கூறப்பெற்றக் கவின் கலைகள் யாவையும் பல்லவர் காலத்திலும் தொடர்ந்து வந்ததுடன் பரத நாட்டியம் , கர்ணங்கள் , ஓவியங்கள் போன்ற நுண்கலைகளும் சிறப்புற்றிருந்தமையினை இக்கட்டுரைக்கொண்டு அறிந்தோம்.

***நோக்கீட்டு நூல்கள்***

சுப்பராயலு, எ., ராகவவாரியார், (1991) 'பூலாங்குறிச்சிக் கல்வெட்டுகள்', *ஆவணம்*, இதழ்.1, தமிழகத் தொல்லியல் கழகம், தஞ்சாவூர்

மயிலை, சீனி வேங்கடசாமி, (2022) *தமிழர் வளர்த்த அழகுக்கலைகள்*, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

Annual Reports on Indian Epigraphy, (*ARE*) ASI, New Delhi

Epigraphia Indica, (*EI)*,vol.XII, ASI, New Delhi, pp.227-228

Lockwood, M. (1974), *Mahabalipuram Studies*, Madras.

**Rea, A, *Pallava Architecture*, ASI, Imperial series, XXXIV )**

South Indian Inscriptions, (*SII*) ASI, New Delhi.

Inscriptions of Pudukottai State (*IPS*)

Meenakshi, C. (1977), *Administration and Social Life Under the Pallavas*, University of Madras.